DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai.
DVC . No. 2 of 2024
List of witness/Prosecution witness : DW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. ரமேஷ் | Caste | : | |
| Fathers Name | : | திரு. முத்து | Calling | : | |
| Village | : | திருகண்டலம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 51 |

(Accused called present)

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.06.2025.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி நேரம் 11.25

1. மனுதாரர் திருமணத்திற்க்கு முன்னர் கன்னிக்கைபேரிலுள்ள தனியார் மருத்துவமனையில் பணி புரிந்து வந்ததாகவும், திருமணத்திற்கு பிறகு பணிக்கு செல்லவேண்டாம் என்று கூறி அவரை இன்றளவும், காப்பாற்றி வருவதாகவும் கூறுகின்றேன் என்றால் தற்சமயம் வேலைக்கு செல்கின்றார் என்றால் சரிதான். (திருமணத்தின்போது நான் அவரை பார்த்து கொள்ளவதாக தான் கூறினேன் அவரை பார்த்து கொண்டு தான் வந்தேன் ஆனால் அவர் தற்சமயம் வேலை செல்கிறார்.)

2. மனுதாரார் எங்கு வேலை செய்து வருகின்றார் என்றால் திருகண்டலத்தில் உள்ள முதியோர் இல்லத்தில் தற்போது வேலைக்கு சென்று வருகின்றார்.

3. முதியோர் இல்லத்தில் என்ன பணி செய்து வருகின்றார் என்றால் அவர் செவிலியராக பணி செய்து வருகின்றார் அதற்கு உங்களிடம் ஆதாரம் எதெனும் உள்ளதா என்றால் அவருடைய மாத சம்பளம் அவருடைய வங்கி கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. அதற்கான ஆவணம் என்னிடத்தில் இல்லை. ஆனால் வேலை சென்று வருகிறார்.

4. இந்த விவரத்தை நீங்கள் உங்கள் வழக்கறிஞரிடம் சென்னீர்களா என்றால் அவர் இப்போது தான் வேலை செல்கின்றார். இப்போது தான் என்றால் குறிப்பாக எந்த மாதத்தில் என்றால் சுமார் 4, 5 மாதங்களாக சென்று வருகிறார்.

5. நீங்கள் தற்போது பயன்படுத்தி வரும் கார் எப்போது வாங்கப்பட்டது என்றால் 2023 ஜீலை மாதம் வாங்கப்பட்டது. என்ன கார் பயன்படுத்தி வருகின்றீர்கள் என்றால் Hyundai creta . நீங்கள் உங்களது காரை மொத்த தொகை செலுத்தி பெற்றீர்களா என்றால் நான் இந்தியன் வங்கி கன்னிகைப்பேர் கிளையில் கடன் பெற்று வாங்கினேன்.

6. 8 லட்சம் ரூபாய் நான் Down paymentஆக கட்டி விட்டேன் மீதி தொகையான கடன்

தொகை 8 லட்சம் ரூபாய்யை கடனாக பெற்றேன்.

7. இந்தியன் வங்கி கன்னிகைப்பேர் கிளையில் கடனாக பெற்ற தொகைக்கு யார் செக்கியூரிட்டி கையொழுத்து போட்டார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை நான் ஆவணத்தை பார்த்து செல்கின்றேன்.

(நீங்கள் வங்கியில் செக்கியூரிட்டியாக இரண்டாவது மனைவி கையொழுத்து போட்டுள்ளளார், மேலும் உங்களுடைய புகைப்படமும் அவருடைய புகைப்படமும் கடன் பத்திரத்தில் இணைக்கப்பட்டுள்ளது)

8. உங்கள் கடன் பத்திரத்தை நீதிமன்ற அழைப்பானை கொடுத்து இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு உங்களுக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை.

9. நீங்கள் உங்கள் நிருபணவாக்குமூலத்தில் பத்தி 22 ல் நீங்கள் மனுதாரர் வெங்கல் என்ற இடத்தில் வேலைக்கு செல்வதாக கூறியுள்ளீர்கள் ஆனால் 4,5 மாதங்களாக வேலைக்கு போவதாக கூறுகிறீர்கள் மனுதாரர் தற்போது வெங்கல் என்ற இடத்தில்வேலை பார்க்கவில்லை ஆசரமத்தில் வேலை செய்து வருகிறார் மேலும் இதற்கு முன்னர் ஒரு நிறுவனத்தில் இரவு நேர வேலை செய்து வந்தார்.

10. நீங்கள் மனுதாரர் ரூபாய 15 ஆயிரம் மாத சம்பளம் வாங்குவதாக கூறியிருக்கிறிர்கள் இந்த விவரத்தை நீங்கள் எந்த ஆவணத்தை வைத்து கூறுகிறிர்கள் என்றால் மற்றவர்கள் அவர் பெற்று வரும் சம்பளத்தை கூறுகிறார்கள் மற்றும் அவர் வேலை செய்து எனக்கு தெரியும் அதை வைத்து கூறுகிறேன்.

11. நீங்கள் வெங்கலில் எந்த மருத்துவமனையில் கூறியிருக்கிறீர்களா என்றால் இல்லை.

12. மனுதாரர் வட்டிக்கு விடும் தொழில் செய்வதாக கூறியிருக்கிறீர்கள் அவர் யாருக்கு எல்லாம் கடன் கொடுத்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

13. நீங்கள் யாருக்கு அவர் பணம் கொடுத்தார் மாதம் ரூபாய் 75 ஆயிரம் வட்டி விடுவதன் மூலம் சம்பாதிப்பதாக எப்படி கூறுகின்றீர்கள் என்றால் மனுதாராருடைய தாயார் உடைய நிலத்தை நான் 22 லட்சத்தி 50 ஆயிரம் விற்பனை செய்து கொடுத்தேன் அதை வட்டிக்கு விட்டால் சுமார் 75 ஆயிரம் ரூபாய் வரும் அதன் அடிப்படையில் நான் கூறுகின்றேன்.

14. மனுதாரர் மற்றவருக்கு கடன் கொடுத்து வரும் நிலமையில் மனுதாரர் மற்றவர்களிடம் எப்படி கடன் வாங்க முடியும் என்றால் தற்போது தான் இடத்தை விற்பனை செய்து அவரிடம் பணம் இருக்கிறது அதற்கு முன்னர் பலரிடம் கடன் பெற்று வாரம் முழுவதும் கடனை பெற யாரேனும் வந்து செல்வார்கள்.

15. எமசா 4 ஆவணத்தின் படி நீங்கள் மனுதாரர் 22லட்சம் ரூபாய் பெற்றதாக கூறுகிறீர்கள்ா என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணத்தல் உங்கள் மனைவியின் சொத்தின் அளவு எவ்வளவு என்றால் 50 சென்ட்.(நீங்கள் தாக்கல் செய்துள்ள எமசா 4

ஆவணத்தில் 9பேர் சேர்ந்து தான் இடத்தை விற்பனை செய்துள்ளார்கள் அப்படி இருக்கும் போது உங்கள் மனைவிக்கு மட்டும் 50 சென்ட் உரிமை இருக்க வாய்ப்பு இல்லை. நீங்கள் குறியீடு செய்திருக்கும் ஆவணத்தல் மொத்த கிரைய தொகையாக ரூபாய் 49,50,300 என்று குறிப்பிடபட்டு இருக்கும் பட்சத்தில் உங்கள மனைவிக்கு 22 லட்சத்தி 50 ஆயிரம் கிடைக்க வாய்ப்பு இல்லை.)

16. நீங்கள் உங்கள் மனைவிக்கு 22லட்சத்தி 50ஆயிரம் ரூபாய் வந்ததாக வழக்கிற்காக பொய்யாக செல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

17. சாட்சியிடம் புகைப்படத்தை காட்டி இந்த புகைப்படத்தில் இருக்கும் இடத்தை வைத்து தான் மனுதாரர் சம்பாதிப்பதாக கூறியிருக்கிறீர்கள் என்றால் அந்த புகைப்படத்தில் இருக்கும் இடம் என் மனைவி மற்றும் அவருடைய வீட்டாருடையது. (புகைப்படம் ______________குறியீடு செய்யப்படுகின்றது.) இந்த புகைப்படத்தல் இருக்கும் இடம் செழிப்பாக இல்லை இங்கு நீங்கள் கூறுவது போல் விவசாயம் செய்தோ அல்லது ஆடு விற்பனை செய்வதற்கு முன் அந்த ஆடுகளை இந்த இடத்தில் வைத்து பாதுகாப்பதற்கோ உகந்த இடமாக இல்லை நான் கூறியிருப்பது திருகண்டலத்தில் இருக்கும் இடத்தை தான் நான் வாக்குமூலத்தில் கூறியுள்ளேன்.

18. தற்போது என்ன பயிர் விளைவித்து வருகின்றார் என்றால் இன்றைய தேதியில் என்ன பயிர் விளைவித்து உள்ளார்கள் என்று எனக்கு தெரியவில்லை.

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகின்றது.

சாட்சியம் முடிவுற்ற நேரம் 12.15